முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

ஆர்.எல்.டி.ஓ.பி.எண். 2/2024

இன்று 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ம் நாள் இன்று இந்த ம.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகம்மது அலி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | கிராமம் | : | |
| வயது | : | | தாலூக்கா | : | |
| நாள் | : | 27–01–2026 | மாவட்டம் | : | திருப்பூர் |

<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு படித்துள்ளேன். மனுச் சொத்து எனக்கு வந்ததைக் காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு யார் கிரயம் கொடுத்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. கடந்த 1973ல் கிரயம் பெற்றேன். 1973ல் எனக்கு என்ன வயது என்றால் 10 வயது இருக்கும்.

2. கிரயத்தின்போது நான் இளவராக இருந்தேன் என்பதை காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் என்னை மைனராக போட்டு என் தாயார் பெயரில் கிரயம் பெறப்பட்டது. என் பெயரில் உள்ள கிரயம் ஆவணம் தாக்கல் செய்யவில்லை, பொய்யாக தாக்கல் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஹோட்டல் அன்னபூரணா எந்த ஆண்டில் இருந்து வாட,கைக்கு உள்ளனர் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஹோட்டல் அன்னபூரணாவிற்காக யார் வாடகைக்கு எடுத்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தீனதயாளன் என்பவர் வாடகைக்கு எடுத்தார் என்றால் சரிதான்.

3. முதன்முதலாக எவ்வளவு வாடகைக்கு எடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. தற்போது தீனதயாளன் மகன் வெங்கடேஷ் என்பவர் ஹோட்டல்

அன்னபூரணாவின் ஒரு பங்குதாரர் என்ற முறையில் நிர்வாகம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது மனுச் சொத்துக்கு எவ்வளவு வாடகை என்றால் எனக்கு கடந்த 15 ஆண்டுகளாக வாடகை வரவில்லை. கடைசியாக எப்போது எவ்வளவு வாடகை பெற்றேன் என்றால் கடந்த 2002ம் ஆண்டு தான் கடைசியாக வாடகை பெற்றேன். அதன்பிறகு வரவில்லை.

4. தற்போது எனக்கும் 2ம் மனுதாரருக்கும் மாத வாடகையாக தலா ரூ.54,306/ எதிர்மனுதாரரால் கொடுக்கப்பட்டு வருகிறது என்றால் எனக்கு வாடகை வரவில்லை. எதிர்மனுதாரர் எங்களுக்கு வாடகைக்கு செலுத்தி வருகிறார், மனுவிற்காக வாடகை வரவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் 2 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மனுக்கள் மேற்கொண்டு நடத்தாமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்குகள் 2016, 2017 ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

5. உண்மையில் எதிர்மனுதாரர் வாடகை செலுத்தாமல் இருந்திருந்தால் அந்த மனுக்களை மேற்கொண்டு நடத்தி இருப்பேன், வாடகை வந்ததால் தான் அந்த மனுக்களை மேற்கொண்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட மனுக்கள் பற்றிய விவரங்களை இந்த மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட மனுக்களின் விவரங்களை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6. மனுவில் நான் குறிப்பிட்டுள்ள ரூ. 32,44,800/- தொகையானது எந்த காலக் கட்டத்தில் இருந்து வாடகை பாக்கியாக உள்ளது என்பதைக் காண்பிக்க எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த தொகை வருவதற்கு முன்பு எதிர்மனுதாரர் வாடகையை எப்படி செலுத்தி வந்தார் என்றால் எனக்கு காசோலையாக கொடுத்து வந்தார். அதை வங்கியில் காசாக்கிக் கொள்வேன். மனுவில் 2015ம் ஆண்டில் இருந்து வாடகை வரவில்லை என குறிப்பிட்டு விட்டு, சாட்சியத்தில் 2002ம் ஆண்டில் இருந்து வாடகை வரவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. எதிர்மனுதாரர் கடந்த 2002ம் ஆண்டு வாடகை செலுத்தவில்லை என்பதைக் காட்ட விவரங்கள் கொடுத்திருப்போம், வாடகையை பெற்றுக் கொண்டு வாடகை வரவில்லை என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2013ம் ஆண்டு நான் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஜெராக்ஸ் வாடகை ஒப்பந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். அந்த ஆவணம் 2013ம் ஆண்டுக்கான வாடகை ஒப்பந்த ஆவணம் என்றால் நாங்கள் மட்டுமே கையொப்பம் செய்துள்ளோம். எதிர்மனுதாரர் கையொப்பம் செய்யவில்லை. இந்த வாடகை ஒப்பந்த ஆவணம் நகல் ஆவணமாக உள்ளது என்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபணை செய்யப்பட்டது. எனவே எதிர்மனுதாரர் தரப்பில் அவரது சாட்சியத்தில் அந்த வாடகை ஒப்பந்த நகல் ஆவணத்தை குறியீடு செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.

8. எதிர்மனுதாரர் கையொப்பம் செய்த அசல் ஆவணம் உள்ளது அதை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை மறைத்து தாக்கல் செய்த இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாடகையை இதுநாள்வரை பெற்றுக் கொண்டு வாடகையே பெறவில்லை என பொய்யாக சாட்சியம் அளிப்பதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை அதனால் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. உண்மையில் எந்த ஆண்டு வரை வாடகை பெற்றோம் என்பதைக் காட்டினால் உண்மை தெரிய வரும் என்பதால் அந்த விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மனு பொய்யானது மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.01.27 16:45:40 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.